1. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) பேரவையின் மாலை கூட்ட நேரத்தில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டு பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு, இன்றைய நிகழ்ச்சிநிரலில் பேரவை இன்று மாலை 5-00 மணிக்குக் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளை ஏற்று, இன்றும், நாளையும் பேரவை மாலையில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதற்குப் பதிலாக மாலை 4-00 மணிக்குக் கூடும் என்பதை பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம், புதுப்பேட்டை பள்ளிச் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரத்திலுள்ள Vaithialinga Nursery And Primary School-ல் ஒன்றாம் வகுப்பு படிக்கின்ற 5 வயது பெண் குழந்தை வயிற்று வலியால் துடித்ததைத் தொடர்ந்து, அக்குழந்தையின் பெற்றோர் விருத்தாசலத்திலுள்ள தனியார் மருத்துவரிடம் காண்பித்துள்ளனர். அப்போது குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர், குழந்தையை பாலியல் துன்புறுத்தல் செய்துள்ளார்கள் என்பதால், அக்குழந்தையை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வலியுறுத்தியுள்ளார். அதைத் தொடர்ந்து அக்குழந்தை விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளது. அங்கு குழந்தையைப் பரிசோதித்த அரசு மருத்துவர் குழந்தையின் நிலை குறித்து விருத்தாசலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவித்துள்ளார். அதைத் தொடர்ந்து அக்குழந்தையை